
பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை 04.11.2025 | அதிர்வு 98

## சரித ரத்வத்தே இன்று கைது!



நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் பிரதமரின் மூத்த ஆலோசகருமான சரித ரத்வத்தே இன்று 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# “இலங்கை ஆசீர்வதிக்கப்பட்ட நாடு”

## சஜித்திடம் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா தெரிவிப்பு

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, புதுடில்லியில் அமைந்துள்ள நிதி அமைச்சில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தியா போன்ற பெரிய சந்தை வாய்ப்புகளை அணுகுவதன் மூலம் இலங்கையின் தொழில் துறையை வேகமாக முன்னேற்றம் காணச் செய்ய முடியும் என்று இந்திய நிதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார். 03



# அம்பலாங்கொடை நகரில் இன்று வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொலை!

## நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணை வேட்டை

அம்பலாங்கொடை நகர சபை வளாகத்துக்கு அருகில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார் ஒன்றில் வந்த இனந்தெரியாத இருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த வர்த்தகர், பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

55 வயதான நிலந்த வருஷ விதான என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 02





# தெல்லிப்பழையில் கோர விபத்து! இளம் குடும்பஸ்தர் பரிதாபப் பலி!!






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தெல்லிப்பழையில் நேற்று இரவு இடம்பெற்ற கோர விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தனது மோட்டார் சைக்கிளில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து கீரிமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வேளை கனரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மயிலிட்டியைச் சேர்ந்த வசந்த் (வயது 35) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர், கனரக வாகனத்தை முந்தியச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி கீழே வீழ்ந்துள்ளார். இதன்போது கனரக வாகனம் அவர் மீது மோதியுள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சரித ரத்வத்தே...**

கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


உரிய நடைமுறையை மீறி 2015ஆம் ஆண்டில் எந்தவொரு அவசியமும் இன்றி அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 9 கோடி ரூபாவுக்கும் அதிக நிதியைச் செலவிட்டு 50 தற்காலிக நெல் களஞ்சியங்களை இறக்குமதி செய்தமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கமைய சரித ரத்வத்தே கைது செய்யப்பட்டுள்ளார்.

**அம்பலாங்கொடை...**

துப்பாக்கிதாரிகள் வந்த கார் வேறொரு இடத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர், பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய கரந்தெனிய சுத்தா என்பவரின் மைத்துனர் எனத் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணை வேட்டையில் இறங்கியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



### முள்ளியவளை படைப்பிரிவு முகாமில்

# செங்கல் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சாவு!

### மேலும் மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, முள்ளியவளையில் உள்ள 59 ஆவது படைப்பிரிவு முகாமில் கைவிடப்பட்ட கட்டடத்தின் செங்கல் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் 3 இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

குருநாகலைச் சேர்ந்த 24 வயதுடைய இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது உயிரிழந்த சிப்பாயும், காயமடைந்த 3 சிப்பாய்களும் விறகு சேகரித்துக் கொண்டிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த சிப்பாய்கள் மூவரும் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**‘இலங்கை ஆசீர்வதிக்கப்பட்ட நாடு”**

வலுவான உள்நாட்டு தொழில் துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார இறையாண்மையை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய 4 பில்லியன் அமெரிக்க டொலர் ஒத்துழைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றியை இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், ஒரு தனி நாடாக இலங்கைக்கு வழங்கிய மிகப் பெரிய நிதி மானியம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் துறை கொள்கை மற்றும் டிஜிட்டல் ஆளுகை தொடர்பில் இந்தியாவின் சாதனைகளைப் பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவர், ஒப்பீட்டு ரீதியாக நிலைத்தன்மை காணப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் வெளிநாட்டு கையிருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புதல், ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

வெளிப்படையான மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான ஒத்துழைப்பின் அவசியப்பாடு தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு இணங்கிக் கொண்டனர்.



கூட்டு முயற்சியாண்மைகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கு இந்தியா – இலங்கை தொழில்நுட்பம் சார் கைத்தொழில் வலயத்தை உருவாக்கும் யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது முன்வைத்தார்.

நவீன வர்த்தக யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்வதற்கும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:–

“இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இலங்கையைப் பற்றி மிகுந்த அன்புடன் பேசியதுடன், இலங்கையை “ஒவ்வொரு வளத்தாலும், மனித ஆற்றலாலும் ஆசீர்வதிக்கப்பட்ட நாடு” என்று வர்ணித்தார். மத்திய அமைச்சரின் இந்தக் கருத்துக்கள், இலங்கையின் உயர்நிலையில் உள்ள வளங்களையும், மனித ஆற்றலையும் நாடு முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு, அதன் உண்மையான திறனை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றது. இலங்கைக்கு நிர்மலா சீதாராமன் தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவு மற்றும் அன்பான வார்த்தைகளுக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்றுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் 950 கிலோ கஞ்சா தீயிட்டு அழிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட 950 கிலோ கஞ்சா தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மற்றும் மேலதிக நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளின் போது மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் சான்றுப்பொருளாக நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

அது தொடர்பான வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து 950 கிலோ கஞ்சாவையும் தீயிட்டு அழிக்க மன்று உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் கோம்பயன் மணல் மயான மின் தகன மேடையில் கஞ்சா போதைப்பொருள் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் மற்றும் மேலதிக நீதிவான் ஆகிய இருவரின் நேரடிக் கண்காணிப்பில் கஞ்சா அழிக்கப்பட்டது.













# திருமலைக் கடற்கரையில் சட்டவிரோத கன்ரீனை அகற்றும் பணி பிக்குவின் தலையீட்டால் நிறுத்தம்




**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத சிற்றுாண்டிச்சாலையை, இன்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்களத்தினர் உடைத்து அகற்ற சென்ற போது,அதனை அண்மித்து உள்ள பௌத்த வணக்க தலத்தின் பிக்குவினது தலையீட்டை அடுத்து 7 தினங்களுக்கு உடைத்து அகற்றும் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளது.

கரையோரப்பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளத்திணைக்களத்தின் திருகோணமலை பிராந்திய பொறுப்பதிகாரி,பொறியியலாளர் முருகையா துளசிதாசன் இவ்விடயம் தொடர்பில் ஊடகளுக்குத் தகவல் தெரிவித்தார்.

திருகோணமலை பிரடெரிக் கோட்டை வீதியின் "டச்பே" கடற்கரையில் தனிப்பட்ட ஒருவரால் சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்தச் சட்டவிரோத சிற்றுாண்டிச்சாலைக் கட்டுமானம் அமைக்கப்பட்டது.

தற்காலிக நிர்மாணம் ஒன்றை அமைப்பதற்கே அப்போது தமது திணைக்களம் அனுமதி வழங்கியது. ஆனால் சிற்றுாண்டிச்சாலையை அமைத்தவர் அனுமதி வழங்கப்பட்ட அளவை விட அதிக அளவில் சில கட்டுமாணங்களை நிரந்தரமாக அமைத்துள்ளார். அத்துடன் சுற்றிலும் பொது மக்கள் கடற்கரைக்கு இலகுவாக செல்வதை தடுத்து வேலி அமைத்துள்ளார்.இதற்கு எம்மிடம் அனுமதி பெறப்படவில்லை என்றார் அவர்.

இந்நிலையில் ""இந்த சட்ட விரோத கட்டுமானத்தை நீக்க நாம் தீர்மானித்தோம். அதனை அடுத்து கட்டடம் அதனை அமைத்தவரால் உரிய காலத்தில் அகற்றப்பட வேண்டும், அல்லது எமது திணைக்களம் கட்டடத்தை இடித்து அகற்றும் என்ற உத்தியோகபூர்வ முன்னறிவித்தல் சென்ற ஆவணி மாதம் 12 ஆம் திகதி கட்டடத்தின் பிரதான வாசலில் எமது அதிகாரிகளால் ஒட்டப்பட்டது. எனினும் உரியவரால் கட்டுமானம் அகற்றப்படவில்லை. இந்நிலையில் கட்டடத்தை அகற்ற முற்பட்ட போது,பௌத்த குருவானவர் திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார் என எமக்கு பொலிஸார் அறிவித்தல் தந்தனர். அதற்கிணங்க பொலிஸ் நிலையத்தில் வைத்து எமது திணைக்களத்திற்கும் பௌத்த குருவிற்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதன் போது எமது திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சின் செயலாளர் உடன் கலந்துரையாடத் தனக்கு 7 வேலை நாள்கள் கொண்ட அவகாசம் தருமாறு பௌத்த குரு வேண்டுகோள் விடுத்தார். அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். இதனால் உடனடியாக உடைத்து அகற்றும் செயற்பாடு பிற்போடப்பட்டுள்ளது. ஆனால் 7 நாட்களுக்குள் குருவானவரால் தொடர்ந்து இவ்விடத்தில் சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்குரிய அனுமதி பெற்றுக்கொள்ளப்படாது விட்டால் 8ஆவது நாள் நாம் முழு கட்டுமானத்தையும் முழுமையாக உடைத்து அகற்றுவோம்" என்று அவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

இதே வேளை இக்கட்டுமானம் அமைக்கப்பட்டுள்ள கடற்கரைப்பகுதி தமது பௌத்த வணக்கத் தலத்திற்குரிய பூஜா பூமி என்றும். அதற்குரிய அரச உத்தியோகபூர்வ ஆவணம் தம்மிடம் உள்ளது என்றும், வணக்க தலத்தின் அபிவிருத்திக்கு இந்தச் சிற்றுாண்டிச்சாலையின் வருமானம் பயன்படுத்தப்படுகின்றது என்றும் வணக்க தலத்தின் பௌத்த பிக்கு கூறினார்.

இதே வேளை இக்கட்டுமானம் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ளது.இது திருகோணமலை மாநகரசபைக்குரியது. எனவே இதனை அகற்றுவது குறித்து மாநகர சபையினால் நீதிமன்றத்தில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றது. இறுதித் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அறிய முடிகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் மன்னார்

இயற்கை வளத்தைச் சுரண்டி அள்ளிப் பயன்படுத்துவது தொடர்பில் அண்மைக் காலத்தில் பல சர்ச்சைகளை எதிர்கொண்டு வந்த மன்னார் தொடர்பில் இப்போது புதிய தகவல் ஒன்று வெளியாகியிருக்கின்றது. இதுவும் ஒரு வகையில் இயற்கை வளத்தைச் சுரண்டி அள்ளுவது பற்றியதுதான்.

இதுவும் புதிய சர்ச்சைகளைக் கிளப்புமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில், மன்னார் கடல் படுகையில் எண்ணெய், எரிவாயு ஆய்வு மற்றும் மேம்பாட்டிற்கான ஏலங்களை கோரும் சர்வதேசக் கேள்விப் பத்திரங்களை இலங்கை திறக்கத் திட்டமிட்டுள்ளதாக அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

மேல்நிலை பெட்ரோலிய மேம்பாட்டிற்கான சர்வதேச ஏல செயல்முறையை நிர்வகிக்க நிபுணத்துவம் பெற்ற ஓர் ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசாங்கம் முன்னதாக கேள்விப் பத்திரங்களைக் கோரியிருந்தது. மேல்நிலை பெட்ரோலிய மேம்பாடு என்பது எண்ணெய் மற்றும் எரிவாயு துறையின் ஆரம்பக் கட்டங்களைக் குறிக்கிறது. இதில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ஆராய்வது, துளையிடுவது மற்றும் உற்பத்தி செய்வது ஆகியவை அடங்கும்.

இருப்பினும், புதிய ஆலோசகரை நியமித்தாலும் இல்லாவிட்டாலும், மன்னார் படுகையில் ஆய்வு மற்றும் மேம்பாட்டிற்கான புதிய கேள்விப் பத்திரங்களை அரசாங்கம் தொடரும் என்று பெட்ரோலிய அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஊடகப் பிரிவு வெளியிட்ட 2021 செய்திக்குறிப்பின்படி, மன்னார் படுகையில் சுமார் 267 பில்லியன் அமெரிக்க டொலர் (இன்றைய இலங்கை நாணய மதிப்பில் எண்பது லட்சம் கோடி ரூபாவுக்கு மேல்) மதிப்புள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் உள்ளன.

பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி, உலகெங்கிலும் உள்ள பன்னாட்டு மற்றும் தேசிய எண்ணெய் நிறுவனங்கள் இப்போதைய கேள்விப்பத்திர செயல்பாட்டில் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், இந்த கேள்விப் பத்திரங்கள் நான்கு முதல் ஐந்து மாதங்கள் வரை திறந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மன்னார் படுகையில் உள்ளவற்றில் இப்போது நான்கு கிணறுகள் அபிவிருத்திக்காகத் திறக்கப்படும். இந்திய நிறுவனத்தின் துணை நிறுவனமான கெய்ர்ன் லங்கா லிமிடெட், 2011இல் மன்னார் படுகையில் இரண்டு ஆய்வு கிணறுகளை தோண்டி, இரண்டு எண்ணெய் வயல்களில் இயற்கை எரிவாயுவைக் கண்டுபிடித்திருந்தது.

இலங்கை செப்டம்பர் 2020 இல் இயற்கை எரிவாயு குறித்த தேசிய கொள்கையை வர்த்தமானியில் வெளியிட்டது. ஆய்வு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் எண் பெட்ரோலிய வளச் சட்டத்தை நாடு அறிமுகப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கட்டார் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் எண்ணெய் நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கையின் எண்ணெய், எரிவாயு ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்க ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன.

எது, எப்படியாயினும் மன்னார்க் கடல் படுக்கை என்பது இலங்கையின் புவிசார் ஆள்புல இறைமைக்கு உட்பட்டதாயினும் அது பக்கத்தில் உள்ள இந்திய உபகண்டத்திற்கு மிக நெருக்கமான பிரதேசமாகையால் அந்தக் கடல்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு என்ற பெயரில் வெளித் தரப்புக்கள் வந்து அந்தப் பிரதேசத்தில் ஆழ வேரூன்றுவதற்கு அனுமதிக்கும் போது இந்தியப் பாதுகாப்பு பற்றிய கரிசனையையும் இலங்கை முன்னெச்சரிக்கையாக கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கும்.



# எங்கள் வரலாற்றை எவராலும் அழிக்க முடியாது...!

‘மாவீரன் மாதம்’ ஒரு உணர்வு பூர்வமான நினைவுக் காலத்தின் தொடக்கமாகவே அமைகிறது. தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் ஆயுதம் ஏந்திப் போராடி தங்கள் இன்னுயிரை ஈந்த வீரர்களை நினைவு கூரும் ஒரு புனித காலமாக இது விளங்குகிறது. பல்லாயிரக்கணக்கான தியாகங்களின் சரித்திரத்தைச் சுமந்து நிற்கும் இந்த மாதத்தை, பல தசாப்தங்கள் கடந்தும், கொடிய யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னரும், தமிழ் மக்கள் இன்றும் கைவிடாது பற்றி நிற்பது, அவர்களின் இனத்தின் மீதான பற்றுக்கும், கொண்ட கொள்கையின் மீதான உறுதிக்கும் மிகச்சிறந்த சாட்சியாகும்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், இந்த மாவீரர் நினைவுகளைத் முற்றிலுமாக அழித்தொழிக்கும் முயற்சிகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. மாவீரர் துயிலும் கல்லறை இல்லங்கள் தரைமட்டமாக்கப்பட்டன, பொது இடங்களில் நினைவேந்தல் செய்வதற்கு கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன, பலத்தரப்புகள் மூலம் மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். ஒரு இனத்தின் வரலாற்றையும், அவர்களின் தியாகங்களையும் ஒட்டுமொத்தமாக மறக்கடிக்கச் செய்யும் ஒரு பாரிய அரசியல் முயற்சி இது. ஆனால், இத்தனை அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், தமிழ் மக்கள் இந்த நினைவுகளைத் தங்கள் இதயங்களில் இருந்து அகற்றவில்லை.

இங்குதான் தமிழ் இனத்தின் உண்மையான உறுதி வெளிப்படுகிறது. அரச அடக்குமுறைகளும், சிதைக்கப்பட்ட கல்லறைகளும் மக்களின் கூட்டு மனசாட்சியைச் சிதைக்க முடியவில்லை. பொதுவெளியில் அனுமதிக்கப்படாவிட்டாலும், ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும், ஒரு சிறிய சுடர் ஏற்றப்படுவதன் மூலம் அந்த நினைவுகள் உயிர்ப்பிக்கப்படுகின்றன. சமூக வலைத்தளங்களின் ஊடாக, புலம்பெயர் தேசங்களின் தெருக்களில், இரகசியமாகக் கூடும் கூட்டங்களில் என ஏதோவொரு வழியில் அந்தத் தியாகங்கள் நினைவு கூரப்படுகின்றன. தடைகளை மீறிச் செய்யப்படும் இந்த ஒவ்வொரு சிறிய நினைவஞ்சலியும், “எங்கள் வரலாற்றை எவராலும் அழிக்க முடியாது” என்று கூறும் ஒரு வலிமையான அரசியல் பிரகடனமாகும்.

இறந்த காலத்துக்கான அஞ்சலியாக அன்றி இது நிகழ்காலத்தின் தேவையும், எதிர்காலத்துக்கான செய்தியுமாகும். இது, “நாங்கள் யார்? எங்கள் வரலாறு என்ன? எதற்காக இத்தனை இழப்புகளைச் சந்தித்தோம்?” என்பதை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் ஒரு முக்கியப் பாலம். தமது மூதாதையர்கள் செய்த தியாகங்களை ஒரு இனம் மறக்குமானால், அது தனது அடையாளத்தையே இழக்கத் தொடங்கும். எனவே, மாவீரன் மாதத்தை நினைவு கூருவது, தமிழ் இனம் தனது வேர்களை, தனது வலிகளை, தனது இலட்சியப் பயணத்தை மறக்கவில்லை என்பதன் உறுதியான வெளிப்பாடாகும். மரணித்த வீரர்களுக்கான தொழுகையாக இருக்கும் அதேவேளை உயிர்வாழும் இனத்தின் உறுதிக்கானது.

அடக்குமுறைகள் உச்சத்தில் இருக்கும்போதும், அச்சுறுத்தல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் போதும், ஒரு இனத்தால் தங்களின் தியாக வரலாற்றை நெஞ்சுறுதியுடன் நினைவுகூர முடிகிறது என்றால், அந்த இனத்தின் அரசியல் வேட்கையையும், அதன் பிணைப்பையும் எவராலும் அசைக்க முடியாது என்பதையே அது பறைசாற்றுகிறது. அந்த வகையில் மாவீரர் மாத அனுசரிப்பு தமிழ் இனத்தின் அணையாத விடுதலை உணர்வுக்கும் அதன் அசைக்க முடியாத உறுதிக்குமான ஒரு காலத்தால் அழிக்க முடியாத சான்றாகத் தொடரும்.

மாவீரர்களின் தியாகங்களில் முதன்மையானது, உன்னதமானது, அவர்களது உயிர் தியாகம் ஆகும். ஒரு கோட்பாட்டுக்காகவும், தமது இனத்தின் விடுதலைக்காகவும் தங்களது வாழ்வையே

தொடர்ச்சி▼




# எங்கள் வரலாற்றை எவராலும் அழிக்க முடியாது...!

**தொடர்ச்சி▲**

முழுமையாக அர்ப்பணிப்பது என்பது தியாகத்தின் உச்சபட்ச வடிவமாகும். போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவர்கள், தமது இலட்சியத்துக்காகத் தம்மையே ஆகுதியாக்கிக் கொண்ட கரும்புலிகள் என ஆயிரக்கணக்கானோரின் மரணங்கள், இந்த விடுதலைப் போராட்டத்தின் அசைக்க முடியாத சான்றுகளாகும். ஒவ்வொரு மாவீரரின் மரணமும், அவர்கள் கொண்டிருந்த உறுதியான பற்றுறுதிக்குச் சாட்சியமாக நிற்கின்றது.

உயிர்த் தியாகத்துக்கு அப்பால், அவர்கள் தியாகம் செய்தது ஒரு சாதாரண மனித வாழ்வின் அத்தனை இன்பங்களையும், கனவுகளையும் ஆகும். தமது இளமைப் பருவத்தை, கல்வி கற்கும் வாய்ப்பை, குடும்பத்துடன் கூடிவாழும் மகிழ்ச்சியை, தனிப்பட்ட இலட்சியங்கள் மற்றும் தொழில்முறை கனவுகளை அவர்கள் முழுமையாகத் துறந்தனர். ஒரு சராசரி இளைஞனோ அல்லது யுவதியோ அனுபவிக்கும் வாழ்க்கையின் இயல்பான கட்டங்களை விடுத்து, அவர்கள் கடினமான, நிச்சயமற்ற, ஆபத்துகள் நிறைந்த ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தனர். இந்தத் துறவற வாழ்வே, அவர்களது அர்ப்பணிப்பின் ஆழமான மற்றொரு சான்றாகும்.

**தியாகத்தின் ஆவண காப்பகங்கள்**

மாவீரர் தியாகங்களுக்குக் கிடைத்த மிக உறுதியான, கண்கூடான சான்றுகள் கல்லறைகள் மாத்திரமே.ஒவ்வொரு கல்லறையிலும் பொறிக்கப்பட்ட மாவீரரின் பெயர், அவரது படையணி, வீரமரணமடைந்த திகதி ஆகியவை, ஒரு தனிமனிதனின் தியாகத்தை சரித்திரத்தில் ஆவணப்படுத்தின. போருக்குப் பின்னரான காலங்களில் இவற்றுள் பல சிதைக்கப்பட்ட போதிலும், அந்த இடங்கள் இன்றும் தியாகத்தின் குறியீடாகவே மக்களால் பார்க்கப்படுகின்றன.

தியாகங்கள் உயிர்ப்புடன் பேணப்படுவதற்கு, நினைவுச் சின்னங்கள் மட்டும் போதாது. அவை மக்களின் பண்பாட்டோடும் கலக்க வேண்டும். அந்த வகையில், நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுவது, இந்தத் தியாகங்களை வருடாந்தம் நினைவுகூரும் ஒரு மாபெரும் சான்றாகும். அன்று ஏற்றப்படும் 'ஈகைச் சுடர்', ஒலிக்கப்படும் 'துயிலுமில்லப் பாடல்', செய்யப்படும் மலர்வணக்கம் ஆகியவை ஒரு தலைமுறையின் தியாகத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் வலிமையான பண்பாட்டுக் கருவிகளாகும். இவர்களுக்காகப் புனையப்பட்ட ஆயிரக்கணக்கான மாவீரர் பாடல்களும், கவிதைகளும், இலக்கியங்களும் இவர்களது தியாகத்தைப் பறைசாற்றும் கலைச் சான்றுகளாகும்.

ஆகவே, மாவீரர்களின் தியாகங்கள் என்பது உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைகளால் விவரிக்கப்படுபவையாக இருப்பதோடு அவை ஆயிரக்கணக்கானோரின் உயிர்களாலும், துறக்கப்பட்ட இளமைக்காலங்களாலும், அழிக்கப்பட்டாலும் மக்களின் மனதில் வாழும் துயிலுமில்லங்களாலும், வருடாந்தம் கடைப்பிடிக்கப்படும் நினைவுகூரல் நிகழ்வுகளாலும் சான்றுகளாக நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தச் சான்றுகளே, தமிழ்த் தேசிய அரசியலிலும், மக்களின் நினைவுகளிலும் அவர்களது தியாகங்களை என்றும் அழியாமல் பாதுகாத்து வருகின்றன.

பாடல்: தொகையறா மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி! வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி! விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி! இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!..

கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்! சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது! எங்கள் – தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின் தாகங்கள் தீராது!..

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம்! – அதை நிரைநிரையாகவே நின்றினி விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!

**கோபாலகிருஷ்ணன் யாழினிப்பிரியா**
**(ஊடகத்துறை மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)**

# அஸ்வெசும மேன்முறையீடு தொடர்பான ஆட்சேபனை விசாரணைகள் ஆரம்பம்





(எம் .எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இரண்டாம் கட்ட அஸ்வெசும பயனாளர்களின் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகள் அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் மேல்முறையீட்டு குழுத் தலைவரும் பிரதேச பிரதேச செயலாளருமான ஏ.சி. அஹமட் அப்கர் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது குழு உறுப்பினர்களாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ. மஜீட், கணக்காளர் ஏ. ஜி. அகமட் அர்கம், அட்டாளைச்சேனை ஸகாத் குழு தலைவர் ஏ. எல். அனீஸ், ஒலுவில் ஸகாத் குழு செயலாளர் எம். ஐ. சுபைர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஐ. பியாஸ், நலன்புரி நன்மைகள் தகவல் பிரிவு உத்தியோகத்தர்களான கே. ஜெயகரன், எம். இஸட். அஸ்வர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில், பயனாளிகளின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து விரிவான விசாரணைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மீன்பிடிவாடி திருமலையில் அகற்றல்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை திருக்கடலூர் கடற்கரையில் தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மீன்பிடிவாடி இன்று (04) கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்களத்தினரால் இடித்து அகற்றப்பட்டது.

கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த இந்தக் கட்டுமானத்தை அகற்றுமாறு கூறி திணைக்களம் கடந்த ஒகஸ்ட் மாதம் உத்தரவை கட்டடத்தில் ஒட்டியது.

எனினும் நேற்றுவரை அந்தக் கட்டுமானம் அதனை அமைத்தவரால் அகற்றப்படவில்லை. இந்த நிலையில் கட்டுமானம் திணைக்கள அதிகாரிகளால் இடித்து அகற்றப்பட்டது.



# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சீன தூதரகத்தால் 240 கதிரைகள் வழங்கல்



**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு 240 கதிரைகள் சீன தூதரகத்தால் மாவட்டச் சிவில் சமூக அமைப்பினூடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கோரிக்கையின் பேரில் சீனத் தூதரகத்திடம் இருந்து மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பால் பெற்றுக் கொள்ளப்பட்ட 240 கதிரைகள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தினரிடம் நேற்று திங்கட்கிழமை (03) மாலை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சி.மாமாங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அதிகாரி திருமதி க.கலாரஞ்சினி, மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் செயற்குழு உறுப்பினர்கள், வைத்தியசாலை நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட சிவில் சமூக அமைப்பு பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் தமது கோரிக்கைக்கு இணங்க சீனத் தூதரகத்தின் ஊடாக இந்தக் கதிரைகளைப் பெற்றுத்தந்த சிவில் அமைப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும், இந்தப் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் நலன் கருதி, இன்னும் பல தேவைகள் உள்ளன அவ்வாறான தேவைகளில் முன்னுரிமை அடிப்படையில் முடியுமானவற்றை நிவர்த்தி செய்து தருவதற்கு மாவட்ட சிவில் அமைப்பு முன்னிற்க வேண்டும் எனவும் இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அதிகாரி திருமதி க.கலாரஞ்சினி தெரிவித்தார்.





# நாதஸ்வரசக்கரவர்த்தி பாலமுருகனுக்கு அமெரிக்காவில் இரண்டு விருதுகள்!




Certificate of Special Congressional Recognition

PRESENTED TO

Balamurugan Suppusamy

Given,

Joseph D. Morelle, Member of Congress
25th District, New York State


NEW YORK STATE
SENATE
Proclamation

HONORING ASTHANA VIDWAN PS BALAMURUGAN SUPPUSAMY AND THE BALAMURUGAN NADASWARAM ENSEMBLE UPON THE OCCASION OF THEIR "YAZHPANAM MUSICAL MEDLEY" PERFORMANCE IN ROCHESTER

JEREMY A. COONEY



( வி.ரி. சகாதேவராஜா)

உலகப் புகழ் பெற்ற ஈழிசை சித்தன், தெய்வீக நாதஸ்வர சக்கரவர்த்தி ஈழநல்லூர் பாலமுருகனுக்கு அமெரிக்க அரசின் இரண்டு உயரிய அங்கீகாரங்கள் விருதுகள் பெருமையுடன் வழங்கப்பட்டுள்ளன.

Senate Proclamation – நியூயார்க் மாநில செனட்டர் ஜெரமி கூனியின் அலுவலகத்திலிருந்தும், Certificate of Special Recognition – அமெரிக்க காங்கிரஸ்மேன் ஜோ மொரெல்லே விடமிருந்தும் கிடைக்கப்பெற்றன.

தமிழ் நாதஸ்வரத்துக்கு அமெரிக்காவில் கிடைத்த அங்கீகாரம் மற்றும் நாதஸ்வரவித்துவான் பாலகுமாரனுக்கு கிடைத்த உயரிய விருது என்பன இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளன.

இது தொடர்பாக சமூக ஊடகங்களில் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

இலங்கை சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான தலைவர் சிவ சங்கர் ஜீ வாழ்த்து தெரிவிக்கையில்,

"இலங்கையின் தெய்வீக நாதஸ்வர நாதம் அமெரிக்க மேடையிலும் ஒலித்த தருணம் எங்களுக்குக் கிடைத்த பெருமை.

தமிழ் இசையின் இதயத் துடிப்பான நாதஸ்வர ஒலி இன்று அமெரிக்க அரசின் செவிகளிலும் ஒலித்திருக்கிறது.

இவை வெறும் விருதுகள் அல்ல, இவை இன்று நியூயோர்க் மாநிலத்திலும், அமெரிக்க தேசிய மட்டத்திலும், அதன் வரலாற்று ஏட்டில் எம்மண்ணின் மைந்தனின் பெயர் பொறிக்கப்பட்ட தருணம்.

இது நாதஸ்வர கலைக்கான அங்கீகாரம். நமது இசை மரபின் ஆழமும், நாதஸ்வரக் கலையின் சிறப்பும், ஒரு கலைஞனின் வாழ்நாள் அர்ப்பணிப்புக்குமாக இணைந்த உயர் அங்கீகாரம் இது.

யாழ். மண்ணில் பிறந்த அந்த நாதம், இன்று ரொச்செஸ்டர் நகரின் இதயத்தில் இருந்து அமெரிக்க அரசின் நெஞ்சைத் தொட்டிருக்கிறது. அதுவே இந்த பெருமையின் தூய யதார்த்தம்.

எல்லை கடந்த உழைப்பும், பண்பாட்டை தாங்கும் தியாகமும் இன்று உலகமெங்கும் பாராட்டைப் பெற்றிருக்கிறது. உங்கள் நாதம் இன்னும் உலகம் முழுவதும் தொடர்ந்து ஒலிக்க என்குரு திருமூலரை வேண்டுகிறேன்"– என்றார்.






# நாட்டில் சகல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 07ஆம் திகதி விடுமுறை!

(மஸ்கெலியா நிருபர்)

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 07 ஆம் திகதியுடன் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தர பரீட்சையை முன்னிட்டு எதிர்வரும் 07 ஆம் திகதியுடன் நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் டிசெம்பர் 8ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை முன்னிட்டு விடுமுறை வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைகள் டிசெம்பர் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் டிசம்பர் 8 ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து 2026 ஜனவரி முதலாம் திகதி புதிய கல்வியாண்டுக்காக பாடசாலைகள் ஆரம்பமாகும். தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் 2026 ஜனவரி முதலாம் திகதி முதலாம் தவணையின் முதற்கட்ட கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாகி பெப்ரவரி 13ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி 14 முதல் மார்ச் 2 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 3 ஆம் திகதி முதல் ஏப்ரல் 10 வரை இடம்பெறவுள்ளது. ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 19 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் தவணை ஏப்ரல் 20ஆம் திகதி ஆரம்பமாகி ஜுலை 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. மூன்றாம் தவணையின் முதற்கட்டம் ஜுலை 27 முதல் ஆகஸ்ட் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஓகஸ்ட் 8 முதல் செப்ரெம்பர் 6ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் செப்ரெம்பர் 7ஆம் திகதி முதல் டிசெம்பர் 4ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை ஆயுள்வேத மருத்துவ சேவைக்கு 303 பட்டதாரிகளை உள்வாங்க நியமனம்!

(அபு அலா)

பொது சுகாதார மருத்துவ அதிகாரிகள் உட்பட 303 பட்டதாரிகளை இலங்கை ஆயுள்வேத மருத்துவ சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான புதிய நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (03) கொழும்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், 303 ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் இந்த நியமனத்தை பெற்றுக் கொண்டனர்.

அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கும், பல உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



2018 ஆம் ஆண்டுக்குப் பின் உள்ளூர் ஆயுள்வேத மருத்துவ சேவைக்காக ஒரே நேரத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான மருத்துவ உத்தியோகத்தர்கள் இவர்களாவர்.

நாட்டில் ஆயுள்வேத சேவையின் எதிர்கால செயல்திறனை மேம்படுத்துவதற்கும், வினைத்தினான நோயாளர்களுக்கான சேவையை வழங்குவதற்கும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த ஆட்சேர்ப்புகளை ஆயுள்வேத திணைக்களம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



### ஆதம்பாவா எம்.பியின் முயற்சியால்

# சம்மாந்துறை இ.போ.ச. டிப்போ மக்கள் பாவனைக்குக் கையளிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கடந்த தேர்தல் காலங்களில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார மேடைகளில் முதன்மையாகப் பேசப்பட்ட சம்மாந்துறை இ.போ.ச. பஸ் டிப்போ பிரச்சினையானது அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழு தலைவரும், இலங்கை அரசமைப்புப் பேரவையின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் தொடர்ச்சியான முயற்சியின் காரணமாகச் சம்மாந்துறை மக்களிடம் நேற்று (03) திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டு, அதன் முதற்கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினரின் பங்குபற்றலுடன் ஊர் பொது மக்களும் சேர்ந்து அதனை எதிர்கால நடவடிக்கைக்காக தயார் நிலைக்குக் கொண்டு வந்தனர்.

இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாடு அமைச்சர் விமல் ரத்னாயக்க, அபிவிருத்தி கிராமியப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்குப் பிராந்திய பிரதான முகாமையாளர் ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.



இந்த நிகழ்வின் போது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.பி. நவாஸ் உட்பட தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், போக்குவரத்து சபையின் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.எ





# வாசிப்பின் முக்கியத்துவமும் மேம்படுத்தும் வழி முறைகளும்



நடராசா கோபிராம்,
(உளவியல்
சிறப்புக் கலைமாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்)

மனித வாழ்க்கையின் முழுமையை தீர்மானிக்கும் சக்தியாக வாசிப்பு காணப்படுகின்றது. பிரான்சிஸ் பேகன் “வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்” என்கின்றார். அறிவை ஆற்றல் மிக்க சக்தியாக உருத்திரட்டி உலகின் சவால்களை எதிர்கொள்ளும் திராணியாக வாசிப்பு திகழ்கின்றது. மனிதன் தன்னைத் தானே அறியவும், அவன் பலம், பலவீனங்கள் பற்றியும் உலக சிந்தனை பற்றியும் அறிந்து உலகத்துடன் ,ணைந்து செயல்படவும் வாசிப்பு முக்கியமாகின்றது.

இன்றைய இளைய தலைமுறையின் மத்தியில் வாசிப்பு மிகவும் குறைவடைந்து செல்லும் போக்கு காணப்பகின்றது. தொழில்நுட்ப மற்றும் சமூக ஊடகங்கள் பல மாற்றங்களை உண்டு பண்ணியுள்ளன. இதனால் இன்றைய தலைமுறையினரின் ஆர்வம் அதிகமாக தகவல் தொடர்பு, பொழுதுபோக்கு சாதனங்களை சுற்றி அதிகம் காணப்படுகின்றன. இன்று தொழில்நுட்ப சாதனங்களில் ஊடகங்கள் மூலம் இனணயத்தில் வரும் சுருக்கமான கட்டுரைகளை பெற்று நூலகம் செல்லாது விடுகின்றனர். இதனால் தேடலும் குறைந்து, வாசிப்பு பழக்கமும் மட்டுபாடு அடைகிறது.

முதலில் வாசிப்பு என்றால் என்ன என நாம் நோக்கினால், மன ஒருமைப்பாட்டுடன் படைப்பாளியின் எண்ணங்களையும், உணர்வுகளையும் எழுத்துக்கள், எழுத்து உருவங்களை கவனமாக படித்து அவற்றின் பொருளை புரிந்து கொள்ளும் செயல்முறை ஆகும். வாசிப்பு மனிதனுக்கு பல்வேறு வகையான பயன்களை தருகின்றது. இதனால் தேடல் பழக்கம் ஏற்படும், அறிவு வளர்ச்சி, கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, தனி நபர் வளர்ச்சி, சமூக கலாசார விழிப்புணர்வு, மனநல மேம்பாடு, இலக்கிய ஆராய்வு திறன், மன அமைதி, படைப்பாற்றல் மேம்பாடு, மொழியாற்றல் விருத்தி முதலான பல்வேறு பட்ட நன்மைகளை ஏற்படுத்துகின்றது.


சராசரி மனிதன் ஒரு நிமிடத்தில் வாசிக்கும் சொற்களின் எண்ணிக்கை 200 தொடக்கம் 300. பல்வேறுபட்ட சமூக மற்றும் உளவியல் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் வாசிப்பின் மூலம் மனநிலை நன்கு மேம்படுகிறது என்று கூறப்படுகின்றது.

தனிமையில் புத்தக வாசிப்பு மன அழுத்தத்தை குறைக்கின்றது என லியூங் என்பவரின் ஆராய்ச்சிகள் (Journal of Psychomatic Research) யேர்னல் ஒப் சைக்கோ மெட்ரிக் என்பதில் எடுத்துக் கூறப்படுகின்றது.

மூத்த வயதானோரில் தொடர் வாசிப்பில் அவர்களின் நினைவாற்றல் மற்றும் மூளை செயல்பாடுகள் நீடிக்கின்றன என வில்சன் (RS Wilson ) என்பவர் ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்துகின்றார்.

வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்வது பல்வேறுபட்ட விளைவுகளை உண்டு பண்ணுகிறது. அந்த வகையில் சிந்திக்கும் திறன் குறைவடைதல், எழுத்துப் பிழைகள் அதிகரிப்பு, கிரகித்தல் குறைவடைதல், புதிய மொழிகளை கற்பதில் தாமதம், நினைவுத்திறன் பாதிப்பு, கவனிச்சிதறல்கள் ஏற்படல், கற்றலில் தாமதம், பிரச்சினை தீர்த்தல் பண்பு குறைவடைதல் முதலான பல்வேறுபட்ட விளைவுகள்

தொடர்ச்சி▼



# வாசிப்பின் முக்கியத்துவமும் மேம்படுத்தும் வழி முறைகளும்

தொடர்ச்சி ▲

ஏற்படுகின்றன.

பல்வேறுபட்ட உத்திகள் அடிப்படையில் வாசிப்பை நாம் மேம்பாடு அடைய செய்யலாம்.தினசரி 20 – 30 நிமிடம் வாசிப்பைத் தொடர்பழக்கமாகக் கொண்டிருத்தல். வாசிப்பை மேற்கொள்ளும் போது மனதில் கேள்வி எழுப்பி அதாவது இதன் பொருள் என்ன? நோக்கம்என்ன? என்பவற்றை அறிந்து வாசிப்பது சிறந்தது.

வாசிப்பை மேற்கொள்ளும்போது அதற்கான சூழலைத் தேர்வு செய்வது அவசியம் ஆகும். அந்த வகையில் வாசிப்பதற்கான சூழல் அமைதியாகவும், ஒளி மற்றும் காற்று உட் செல்லக்கூடியனவாகவும், சுத்தமாகவும் இருத்தல் வேண்டும்.

வீட்டில் பொருத்தமான இடத்திலோ அல்லது நூல் நிலையத்திலோ வாசிப்பை மேற்கொள்வது சிறந்ததாக அமையும். நூலகம் என்பது அறிவுப் பதிவேடுகளின் சுரங்கமாகும். ஒரு நூலகம் திறக்கப்படும் போது 100 சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. ஆசியாவின் மிகப்பெரியது, பழமை வாய்ந்ததுமான எங்கள் யாழ்ப்பாண பொது நூலகம் இன்றளவு சகோதர மொழியினர்களாலும் பார்வையிடப்படுவதுடன், பெற்றோர்களும் தங்களது குழந்தைகளை அழைத்து வந்து பார்வையிடவும், வாசிக்கவும் செய்கின்றனர். அத்துடன் அங்கு இடம்பெறும் கண்காட்சிகள் மற்றும் மற்றும் போட்டிகள் என்பன வாசிப்பு பழகத்தை தூண்டுகின்றன.

குழு வாசிப்பு மூலம் குழுவாக இணைந்து பல்வேறுபட்ட விடயப் பகிர்வுகளை மேற்க் கொள்ள முடியும். அத்துடன் நண்பர்களுடன் இணைந்து புத்தகப் பரிமாற்றம் மற்றும் வாசிப்பு, அது சார்ந்த விடயங்கள் பற்றி உரையாடும் போது வாசிப்பு மீதான ஆர்வம், தூண்டுதலும் அதிகரிக்கும்.

வாசிப்பை மேற்கொள்ளும்போது மனப்படங்கள், காட்சிகள் உருவாக்கி அதன் அடிப்படையில் வாசிப்பதன் மூலம் படித்ததை மனதில் இலகுவாக நிலை நிறுத்திக் கொள்வதுடன் (ஞாபகம்) ஆழமாகவும் அறிந்து கொள்ள முடியும்.

உணர்ச்சி மனநிலை கட்டுப்பாடு ஆனது வாசிப்பின் மூலம் ஏற்படுகின்றது. இதன் அடிப்படையில் மன அழுத்தமானது குறைவடைவதுடன், மன அமைதியும், மன உறுதிப்பாடும் ஏற்படுகின்றது. அந்த வகையில் வாசிப்பு, நினைவுத்திறன் மேம்பாடு மற்றும் கவன அதிகரிப்பு முதலானவற்றை ஏற்படுத்தி நிற்கின்றது. மன மகிழ்ச்சி, திருப்தியையும் ஏற்படுத்துகிறது.

வாசிப்பின் பிரதான வகைகளான சுருக்கமான வாசிப்பு, தேடல் வாசிப்பு என்பன காணப்படுகின்றது. சுருக்கமான வாசிப்பானது உரையின் முக்கியமான பகுதியை வேகமாக வாசித்தலை குறிக்கின்றது. அத்துடன் தேடல் வாசிப்பு குறிப்பிட்ட தகவலை தேடுவதற்கான பயிற்சி பெறுவதன் அடிப்படையில் வாசிப்பு அமைகின்றது. ,தனுடன் ,ணைந்த முக்கிய வகையாக "பிரச்சனை தீர்க்கும் வாசிப்பு" காணப்படுகின்றது. இது வாசிக்கும்போது எழுத்தாளரின் கருத்துக்களை மட்டும் ஏற்காமல் அவற்றை சிந்தித்து, வாதங்களை மதிப்பாய்வு செய்து இது நம்பகமானதா? இதற்கான ஆதாரங்கள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பி வாசிக்கவும் உதவுகின்றது.

ஆராய்ச்சிகளின் அடிப்படையில், Readers மற்றும் வாசிப்பு பயன்பாடுகளான Kindle, Google books போன்றவற்றையும் many books போன்ற இலவச வாசிப்பு வளங்களையும் பெற்று வாசிப்பை துணி ரீதியாக மேம்படுத்த முடியும்.

மாற்று மொழி வாசிப்பானது மொழித்திறன் மேம்பாட்டுக்கு நன்கு உதவுகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. அத்துடன் இனணய ரீதியான பத்திரிகை வாசிப்பு, வாசிப்பு வளர்ச்சியில் ஒரு புதிய ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. வாசிப்பின் போது மூளையில் ஏற்படும் நரம்பியல் மாற்றங்களால் நினைவாற்றல் மேம்படுகின்றது. என்றும் கவனம் மற்றும் சிந்தனை திறனும் மேம்படுகிறது என M.wolf என்பவர் ஆய்விலே குறிப்பிடுகின்றார்.

சிறுவர்கள் கதைகளை வாசிக்கும் போது சிறுவர்களுக்கு பரிவு, பாசம் மற்றும் சமூகத் திறன்கள் வளர்வதாக சமூக விஞ்ஞான ஆய்வு கூறுகின்றது. அறிவுக்கு வாசிப்பானது ஒரு படிக்கட்டாகவும், நூல்கள் நல்ல நண்பர்களாகவும் செயல்படுகின்றது.

**"வாசிப்பு நல்ல சுவாசிப்பு"**



# ‘முள்ளியில் தொலைந்த முகவரிகள்’ கவிதை நூல் வெளியீடு மட்டக்களப்பில்

(பழுவூரான்)

மட்டக்களப்பு பாலமீன்மடுவைச் சேர்ந்த அருணன் தமிழீழனின் ‘முள்ளியில் தொலைந்த முகவரிகள்’ கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கதிரவன் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்றது.

கதிரவன் கலைக் கழகத்தின் தலைவர் த.இன்பராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத் மற்றும் மட்டக்களப்பு மாநகர நகரபிதா சிவம் பாக்கியநாதன் உள்ளிட்ட மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரமுகர்கள், பொதுமக்கள் லைட்ஹவுஸ் விளையாட்டுக் கழகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகள் வரவேற்கப்பட்டு, நூல் அறிமுகவுரை, நயவுரை மற்றும் நூலாசிரியர் அறிமுகம் என்பன நிகழ்த்தப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், நூலாசிரியரின் பெற்றோர் மற்றும் நூலாசிரியர் உள்ளிட்டோரால் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தொடர்ந்து நூலாசிரியரால் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட அதிதிகளுக்குக் கவிதை நூல் வழங்கி வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், லைட்ஹவுஸ் விளையாட்டுக் கழகத்தினராலும் கன்னிக் கவிஞர் பொன்னாடை போர்த்தி வாழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# காயாக்குழியில் இடைநடுவில் கைவிடப்பட்ட உள்ளக வீதியைத் திருத்துமாறு அறிவுறுத்து

## வலியுறுத்திக் கூறினார் ரவிகரன் எம்.பி.





(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் – சிவாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காயாக்குழி கிராமத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 8.7 கிலோ மீற்றர் தூரமான உள்ளக வீதிச் சீரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், குறித்த சீரமைப்புப் பணிகளை விரைந்து ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

சிலாவத்துறை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. குறித்த கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள குறித்த உள்ளகவீதிச் சீரமைப்புப் பணிகள் விரைந்து ஆரம்பிக்கப்படும் என்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரனால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

காயாக்குழி பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டுதொடங்கப்பட்ட சுமார் 8.7 கிலோ மீற்றர் தூரமான உள்ளக வீதிச் சீரமைப்பு வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் போக்குவரத்து செய்வதில் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அந்தப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்குவதாலும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நானும் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தேன்.

எனவே குறித்த வீதியைச் சீரமைப்பு வேலைகள் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

இந்நிலையில்இதற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் பதிலளிக்கையில்,

உள்ளகவீதிகளைசீரமைப்பதுதொடர்பிலே அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக வீதிச் சீரமைப்புகளுக்கென அதிகளாவான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு வீதிச் சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் அடுத்த ஆண்டுக்கு உரிய வரவு – செலவுத் திட்டத்திலும் வீதிகள் சீரமைப்புக்கென அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் சுட்டிக்காட்டப்பட்ட வீதிதொடர்பிலும் கவனஞ்செலுத்தப்படும். – என்றார்.



# வீதியை விட்டு விலகியதில் பள்ளத்தில் கவிழ்ந்த ஓட்டோ!

(மஸ்கெலியா நிருபர்)

வீதியை விடு விலகிய ஓட்டோ ஒன்று பள்ளத்தில் விடுந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை டீ சைட் காட்மோர் நெடுஞ்சாலையில் டீ சைட் தோட்ட முன்பாக இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தால் இருவர் காயமடைந்த நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர். ஓட்டோவுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.



# உள்ளூர் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடி; 4 இந்திய மீன்பிடிப் படகுகளுடன் 35 மீனவர்கள் கைது!

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

இலங்கை கடற்படை, கடலோர காவல்படையுடன் இணைந்து, வெற்றிலைக்கேணி மற்றும் அனலைதீவு தீவுக்கு அப்பால் உள்ள இலங்கைக் கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை (2025 நவம்பர் 02, 03) அதிகாலையில் சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, உள்ளூர் கடல் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 04 இந்திய மீன்பிடி படகுகளுடன் 35 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நாட்டின் கடல் எல்லைக்குள் வெளிநாட்டு மீன்பிடி படகுகள் அத்துமீறி மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் கடல் சூழல் மற்றும் உள்ளூர் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுக்க இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படை வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதன் மூலம் நாட்டின் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் உள்ளூர் மீனவ சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்புக்கும் கூட்டு, வலுவான அணுகுமுறை மற்றும் உறுதியான அர்ப்பணிப்பு வலியுறுத்தப்படுகிறது.

அதன்படி, ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை (02,03) அதிகாலையிலும், யாழ்ப்பாணத்தின் வெற்றிலைக்கேணி மற்றும் அனலைதீவு தீவுகளுக்கு அப்பால் உள்ள உள்ளூர் கடல் பகுதிக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட பல இந்திய மீன்பிடி படகுகளை வடக்கு கடற்படை கட்டளைப் பிரிவு அவதானித்துள்ளது.

அந்த மீன்பிடி படகுகளை நாட்டின் கடல் பகுதியிலிருந்து அகற்ற வடக்கு கடற்படை கட்டளை மற்றும் கடலோர காவல்படையால் ஒரு சிறப்பு நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது.

அங்கு, உள்ளூர் கடல் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட 04 இந்திய மீன்பிடி படகுகளில் இலங்கை கடற்படை சட்ட பூர்வமாக ஏறி ஆய்வு செய்தது.

எல்லைச் சட்டங்களை மீறி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 04 இந்திய மீன்பிடிப் படகுகளுடன் 35 இந்திய மீனவர்கள் இதன்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளின் மூலம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீன்பிடி படகுகள் மற்றும் இந்திய மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை மற்றும் மைலடி மீன்வள ஆய்வாளர் அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# பிஹாரில் தேர்தல் பிரசாரம் இன்றுடன் நிறைவடைகிறது

## நவம்பர் 6 இல் வாக்குப்பதிவு



பிஹாரில் முதல்கட்ட சட்டப் பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது. இதன் காரணமாக தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் இன்று தீவிரப் பிர சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

243 தொகுதிகளைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நவம்பர் 6 மற்றும் 11 ஆம் திகதிகளில் இரு கட்டங்களாக நடைபெறுகிறது.

இதில் நவம்பர் 6 இல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 18 மாவட் டங்களில் உள்ள 121 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று மாலை 5 மணியுடன் பிரச்சாரம் முடிவடைகிறது. இந்தச் சூழலில், வாக்காளர்களை கவரும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் இன்று தீவிர பிரசாரத் தில் ஈடுபடுகின்றனர்.

பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா இன்று போஜ்பூர் மற்றும் கயா வில் தேர்தல் பிரசாரங்களில் உரை யாற்றுகிறார். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வைஷாலி, பாட்னா, சஹர்சா மற்றும் முங்கர் மாவட்டங் களில் நடக்கும் பிராசாரக் கூட்டங்க ளில் உரையாற்றுவார். மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா தர்பங்கா, கிழக்கு சம்பாரண் மற்றும் மேற்கு சம்பாரண் மாவட்டங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் களை ஆதரித்து பிரசாரம் செய்கிறார். பிரதமர் நரேந்திர மோடி இன்று பிஹா ரில் பாஜக. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெண் தொண் டர்களுடன் கலந்துரையாடுகிறார்.

# மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய, மாநில அரசுகளுக்கு விஜய் கோரிக்கை

தமிழக மீனவர்கள் கைது விவ காரத்தில் நிரந்தரத் தீர்வை மத்திய அரசும், தமிழக அரசும் காண வேண் டும் என தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக அழுத்தமாக வலியுறுத்து கிறேன் என்று அக்கட்சித் தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட் டுள்ள பதிவில்:

“தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த நம் மீனவச் சகோதரர்கள் 35 பேர், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கு சொந்தமான மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப்



படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக வும் செய்திகள் வந்திருப்பது மனவே தனையை அளிக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ள நம் மீன வச் சகோதரர்கள் 35 பேரையும் உடன டியாக விடுவிக்க வேண்டும். அவர்க ளது படகுகளையும் மீட்டுத் தர வேண்டும். மற்ற மாநில மீனவர்கள் மீது காட்டும் அக்கறையைப் போலவே எங்கள் மீனவர்கள் மீதும் காட்டி, இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தாமதமின்றி உடனடி யாக எடுக்க வேண்டும்.

மத்திய அரசுக்கு உரிய அழுத்தத் தைத் தமிழக அரசும் தாமதிக்காமல், உண்மையாகத் தர வேண்டும். இனி இதுபோல நடக்காமல் இருக்க, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஒன் றிய அரசும் தமிழக அரசும் காண வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக அழுத்தமாக வலியுறுத்துகிறேன்.” என்று விஜய் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. தோல்வி பயம் காரணமாக தேர்தல் ஆணையத்தை எதிர்க்கிறது

## ஜி.கே.வாசன் கணிப்பு

முறையான தேர்தல் நடத்தும் கோட்பாடுகளை கொடுக்கும் தேர்தல் ஆணையத்தை தி.மு.க. எதிர்ப்பதற்கு தோல்வி பயமே காரணம் என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் தெரி வித்தார்.

இது தொடர்பாக திருச்சியில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கை யில்,

“தமிழக அரசு சிறப்பு தீவிர வாக் காளர் பட்டியல் திருத்தத்தை (எஸ். ஐ.ஆர்) குறைகூறுவதை வாக்காளர் களே ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை. எஸ்.ஐ.ஆர் பணிகள் குறித்து தேர்தல் ஆணையம் மக்களிடம் விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும். முறையான தேர்தல் நடத்தும் கோட் பாடுகளை கொடுக்கும் தேர்தல் ஆணை யத்தை தி.மு.க. எதிர்ப்பதன் பின்னணி என்ன? தோல்வி பயமே காரணம். பிஹார் தேர்தலில் தே.ஜ.கூ. ஆட்சி மீண்டும் மலர்ந்து நல்லாட்சி தொடர பிரகாசமான வாய்ப்பு அமைந்துள்ளது.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கவலைக்கிடமாக உள்ளது. கொலை, கொள்ளை, போதைப் பொருள் புழக் கம், பாலியல் துன்புறுத்தல் ஆகியவற் றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத அரசாக திணறி வருகிறது தமிழக அரசு. பெண்களுக்கு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகம் மாறி வருகிறது. தி.மு.கவின் அதிகாரவர்க்கத்துக்கு பயந்தே எஸ்.ஐ.ஆர். தொடர்பான அனைத்துக் கட்சி கூட்டத்தில் பல் வேறு கட்சிகள் பங்கேற்றுள்ளன. பிஹாரில் 60 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் தான் கூறுகின்றனர்; தேர்தல் ஆணை யம் கூறவில்லை.

தோல்வி பயத்தில்தான் தேர்தல் ஆணையத்தின் மீது இண்டியா கூட்டணி இப்படியான குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். தாங்கள் வென்ற மாநிலத்தில் தேர்தல் ஆணையத்தை தூக்கிவைத்துக் கொண்டு ஆடுவார் கள், தோற்ற..தோற்கப் போவதாக கருதும் மாநிலங்களில் ஆணையத்தை குறை கூறுவார்கள் என்றால் அவர் கள் கூற்றை யாரும் நம்பத் தயாராக



இல்லை.

தமிழகத்தில் பா.ஜ.க, அ.தி.மு.க. ஆகிய இரு பெரும் கட்சிகளும் இணைந்து தேர்தல் வியூகத்தின் அடிப் படையில் வெற்றி பெறும் சூழலை ஏற்படுத்தி வருகின்றன. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க. அரசை மக்கள் வெறுக்கத் தொடங்கி உள்ளனர். அதனால் ஆட் சிக்கு எதிரான எதிர்மறை வாக்குகள் அதிகரிக்கின்றன. அதனால் இயல் பாகவே எங்களுக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்து வருகிறது. இன்னும் 2 மாதத்தில், தி.மு.கவை எதிர்க்கும் கட்சிகள் எல்லாம் எங்கள் கூட்டணி யில் ஓரணியாய் இணைந்து ஒத்த கருத்துடன் இலக்கை 100 சதவீதம் அடைய வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.” என்றார்.




# வெளிநாடுகளில் ஆயுத ஏற்றுமதிக்கான அலுவலகங்கள் திறக்கின்றது உக்ரைன்

பெர்லின் மற்றும் கோபன்ஹேகனில் ஆயுத ஏற்றுமதி மற்றும் கூட்டு ஆயுத உற்பத்திக்கான அலுவலகங்களை இந்த ஆண்டு உக்ரைன் அமைக்கும் என ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுடனான 4 ஆவது ஆண்டு போரில் அதன் படைகளைத் தடுக்கும் அதே வேளையில், உக்ரைன் அதன் மேற்கத்திய நேச நாடுகளின் உதவியுடன் அதன் வளர்ந்து வரும் உள்நாட்டு பாதுகாப்புத் துறையை விரிவுபடுத்த நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகிறது.

இந்த நிலையில், கடற்படை ட்ரோன்கள் மற்றும் பீரங்கி அமைப்புகள் ஆகியவை உக்ரைன் ஏற்றுமதி செய்யக்கூடிய ஆயுதங்களாக இருக்கும் என ஜெலென்ஸ்கி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், இது கூட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பதை விளக்கிய ஜெலென்ஸ்கி, உக்ரைனிடம் பணம் இல்லாத பற்றாக்குறை பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு அதிக பணம் கிடைக்கும் பொருட்டு, நாமே விற்க அனுமதிக்கக்கூடிய ஆயுதங்கள் அவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், போர் விமானங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் போன்ற முக்கிய ஆயுதங்களுக்காக உக்ரைன் தற்போதும் அதன் நட்பு நாடுகளையே நம்பியுள்ளது. ட்ரோன் மற்றும் ஏவுகணை திட்டங்களை மேம்படுத்துவதில் உக்ரைன் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் உக்ரைன் தனது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஃபிளமிங்கோ மற்றும் ரூட்டா ஏவுகணைகளை பெருமளவில் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளதாக ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்கா-உக்ரைன் ட்ரோன் ஒப்பந்தம் குறித்த மேலதிக பேச்சுவார்த்தைகளுக்காக உக்ரைன் குழு அடுத்த வாரம் வொஷிங்டனுக்குச் செல்லும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகத்துடன் நெருக்கமான உறவை உருவாக்க உக்ரைன் தொடர்ந்து முயற்சிகள் முன்னெடுத்து வருகிறது. ஆனால், மறைமுக ரஷ்ய ஆதரவு நிலையில், ட்ரம்ப் நிர்வாகம் உறுதியாக உள்ளது என்றே அரசியல் நிபுணர்களின் கருத்தாக உள்ளது.




# வட கொரியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனை செய்கின்றன

## ட்ரம்ப் குற்றச்சாட்டு



ரஷ்யா மற்றும் சீனா மட்டுமின்றி, வடகொரியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் ஆசியப் பயணத்தை முடித்துவிட்டு அமெரிக்கா திரும்பிய ட்ரம்ப், அங்கு அணு ஆயுதச் சோதனை நடத்த பாதுகாப்புத் துறைக்கு உத்தரவிட்ட நிலையில், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

ட்ரம்ப் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் மேலும் குறிப்பிடுகையில்,

"ரஷ்யாவும், சீனாவும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபடுகின்றன. ஆனால் இது குறித்து அவர்கள் வெளிப்படையாகப் பேச மாட்டார்கள். ஆனால் நாம் அப்படி இல்லை. நாம் வேறுபட்டவர்கள், வெளிப்படையான சமூகம். நாம் சோதனைகளை நடத்தப் போகிறோம் என வெளிப்படையாகக் கூறியுள்ளோம். மற்றவர்களும் அணு ஆயுத சோதனைகளை நடத்தித்தான் வருகிறார்கள். வடகொரியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றன." என்று தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் ஆசியப் பயணத்தில் இருந்த போது, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ரஷ்யா அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளியாகின.

இதனைத் தொடர்ந்து, ஆசியப் பயணத்தை நிறைவு செய்துவிட்டு அமெரிக்கா திரும்பிய ட்ரம்ப், அணு ஆயுதச் சோதனை நடத்த அந்நாட்டுப் பாதுகாப்புத்துறைக்கு உத்தரவிட்டார்.

இதன் மூலம் 33 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் அணு ஆயுத சோதனை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 04/11/2025

## இந்தியரை தாக்கிய கனேடியர்: அதிகரிக்கும் வெறுப்புணர்வு

கனடாவில், குடிபோதையில் இந்தியர் ஒருவரை கனேடியர் ஒருவர் தாக்கும் காணொலி அதிக கவனம் ஈர்த்துள்ளது.

கனடாவில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான 02▶



# அமெரிக்காவை நம்பி இருக்கும் போக்கை மாற்ற வேண்டுமென்கிறார் கனடா பிரதமர்

அமெரிக்காவை மட்டுமே நம்பி இருக்கும் போக்கை மாற்ற வேண்டும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு விவகாரம் தொடர்பாக கனடா வெளியிட்ட விளம்பரம் சர்ச்சையான நிலையில், அந்நாட்டுடன் அனைத்து விதமான வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

இந்த நிலையில், கனடா உலகின் பிற நாடுகளுடனான புதிய உறவை கட்டியெழுப்ப முடிவு செய்துள்ளதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார். 02▶




# புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் ப்ரூவர்

கனடாவில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்காகச் செயற்கை முடி வாங்க நிதி திரட்டும் முயற்சியில் ஹாலிஃபாக்ஸ் நகர் ஆடை வடிவமைப்பாளர் ஜான் மைக்கேல் ப்ரூவர், ஈடுபட்டுள்ளார்.

20 ஆண்டுகளுக்கு முன்னர், அவரின் நெருங்கிய தோழிகளில் 02▶



## புற்றுநோயால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் கண்டறியப்பட்டது.

அவருக்கு உதவுவதற்காக நிதி திரட்டும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தார்.

முதல் நிகழ்ச்சி பெரும் வெற்றியைக் கண்டதால், அடுத்த ஆண்டும் இதேபோன்ற நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டபோது, அவரது தோழி உயிரிழந்தார்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் அவர் 8,000 டொலருக்கும் மேற்பட்ட தொகையை மார்பகப் புற்றுநோய் அறக்கட்டளைகளுக்கு நன்கொடை யாக வழங்கினார்.

இதனால், ப்ருவர் தனது வடிவமைப்புத் திறனை பல சமூக நல முயற்சிகளுக்காகப் பயன்படுத்தி வருகிறார்.

அதனடிப்படையிலேயே அவர் தற்போது மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக் காகச் செயற்கை முடி வாங்க நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

## அமெரிக்காவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"உலகின் பிற நாடுகளுடன் புதிய உறவை கட்டியெழுப்ப முடிவு செய்துள்ளோம். உலகப் பொருளாதாரத்தில் 60 சதவீதப் பங்களிப்பை வழங்கும், வேகமாக வளர்ந்து வரும் ஆசிய பசுபிக் பகுதியில் உள்ள நாடுகளுடன் உறவை வலுப்படுத்துவதை விட, சிறந்த இடம் வேறு இல்லை.

இந்தோனேசியாவுடன் மேற்கொள்ளப்பட்ட தடையில்லா வர்த்தக ஒப்பந்தம், பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை, சீனாவுடனான உறவில் நிகழ்ந்த திருப்புமுனை ஆகியவற்றை உதாரணமாக கூறலாம்.

இந்தியாவுடனான உறவில் நாங்கள் முன்னேற்றம் அடைந்து வருகிறோம். நான் பிரதமர் மோடியை சந்தித்தது இல்லை. ஆனால், வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பிற அமைச்சர்கள் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். வெளிநாடுகளுடன் சிறந்த உறவை வலுப்படுத்துவது மிகவும் அவசியம்.

அமெரிக்காவை மட்டுமே நம்பியிருக்கும் தன்மையை மாற்ற வேண்டும். இது ஒரே இரவில் நடக்காது என தெரியும். ஆனால் நாங்கள் மிக விரைவாக முன்னேறி வருகிறோம்." என்று தெரிவித்துள்ளார்.



## இந்தியரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெறுப்பு அதிகரித்துவருகிறது. சமீபத்தில், இந்தியர் ஒருவரின் கார் மீது சிறுநீர் கழித்த கனேடியரை தட்டிக் கேட்டதால் அவர் அந்த இந்தியரை அடித்துக் கொலை செய்திருந்தார்.

இந்நிலையில், ரொரன்றோவிலுள்ள கஃபே ஒன்றில், இந்தியர் ஒருவரை கனேடியர் ஒருவர் தாக்கும் காணொலி ஒன்று வைரலாகியுள்ளது.

ஒன்று செய்யாமல் அங்கு நின்றுகொண்டிருந்த அந்த இந்தியரின் கையடக்க தொலைபேசியை ;அந்த கனேடியர் பிடுங்கி எறிய, அவர் அமைதியாக தன் தொலைபேசியை எடுக்க, அவரை நெருங்கிய அந்த கனேடியர், நீ என்ன பெரிய ஆளா, என்னிடமே தோரணை காட்டுகிறாயா என்னும் ரீதியில் கேள்வி எழுப்ப, இதனால் உங்களுக்கு பிரச்சினை ஏற்படலாம் என்கிறார் அந்த இந்தியர்.

உடனே அவரைப் பிடித்துத் தள்ளிய அந்த கனேடியர், அவரது சட்டையைப் பிடித்து அவரை சுவருடன் சேர்த்துத் தள்ளிப் பிடித்துக் கொண்டு மிரட்ட, அந்த கஃபே ஊழியர் ஒருவர் தலையிட்டு தயவு செய்து வெளியே போங்கள் என அந்த கனேடியரை மன்றாடிக் கேட்டுக்கொள்ள, ஒருவழியாக வெளியே செல்கிறார் அந்த கனேடியர்.

சும்மா நின்றாலே, புலம்பெயர்ந்தோரைக் கண்டாலே கைநீட்டும் அளவுக்கு கனடாவில் வெளிநாட்டவர்கள் மீதான வெறுப்பு அதிகரித்துவருவதை தெரிவிக்கப்படுகிறது.



# கனடா கல்வி அனுமதி நிராகரிப்பு அதிகரிப்பு: 74 வீத மாணவர்களின் விண்ணப்பங்கள் ரத்து

கனடாவில் உயர்கல்வி நிறுவனங்களில் சேருவதற்காக இந்திய மாணவர்கள் சமர்ப்பித்த கல்வி அனுமதி விண்ணப்பங்களில், 74 சதவீதம் ஓகஸ்ட்மாதம்நிராகரிக்கப்பட்டுள்ளன என 'ரொய்ட்டர்ஸ்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பதிவான 32 வீதம் நிராகரிப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில், இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

மேலும், கல்வி அனுமதிக்கு விண்ணப்பித்த இந்திய மாணவர்களின் எண்ணிக்கையும் 2023 ஓகஸ்ட்டில் இருந்த 20,900 இலிருந்து, 2025 ஓகஸ்ட்டில் 4,515 ஆகக் கணிசமாகக் குறைந்துள்ளது.



மோசடிமிக்க கல்வி அனுமதிகளைத் தடுப்பதற்காக கனடா அரசாங்கம் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளே அதிகப்படியான நிராகரிப்புகளுக்கு முக்கியக் காரணமாக என கூறப்படுகிறது.

குறிப்பாக, 1,550 க்கும் மேற்பட்ட கல்வி அனுமதிகள் போலி அனுமதி கடிதங்களுடன் தொடர்புடையவை என அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இதில் பெரும்பாலானவை இந்தியாவிலிருந்து வந்தவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த விண்ணப்பங்களில் 40 வீதம் நிராகரிக்கப்பட்ட நிலையில், சீன மாணவர்களின் நிராகரிப்பு விகிதம் 25 வீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைப்பின் நம்பகத்தன்மை குறித்து கனடா அக்கறை கொண்டுள்ள போதிலும், இந்திய மாணவர்கள் கனடாவில் தொடர்ந்து கல்வி கற்பதை விரும்புவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்திருந்தார்.



# சுவீடன் மன்னர் கனடா விஜயம்

சுவீடன் மன்னர் கார்ல் XVI கஸ்டாஃப் மற்றும் மகாராணி சில்வியா நவம்பர் 18 ஆம் திகதி கனடாவுக்கு விஜயம் செய்யஉ ள்ளனர்.

கனடா ஆளுநர் நாயகம் மேரி சைமன் இந்த விடயத்த அதிகாரபூர்வமான அறிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சுவீடன் மன்னர் வருகை தருகிறார் என ஆளுநர் நாயகம் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயத்திற்கான முழுமையான நிகழ்ச்சி நிரல் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், மன்னரும் மகாராணியும் ஒட்டாவா மற்றும் மாண்ட்ரியல் நகரங்களுக்கு செல்லவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மன்னரும் மஹாராணியும், கனடா-சுவீடன் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் பல நிகழ்வுகளில் பங்கேற்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவீடன் என்பது கனடாவின் முக்கியமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு கூட்டாளி என குறிப்பிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கனடாவின் ஆர்க்டிக் வெளிநாட்டு கொள்கை முக்கியப் பங்காக இருக்கும் என்றும் தெரிவிக் கப்பட்டது.

அறிவிப்பில் வழங்கப்பட்ட பின்னணி தகவலின்படி, கனடா-ஐரோப்பிய ஒன்றியம் விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்வீடனின் பெரும்பாலான ஏற்றுமதி பொருள்களுக்கு மீதான சுங்க வரிகள் நீக்கப்பட்டுள்ளன.